பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 188

செவ்வாய்க்கிழமை
03 ஜூன் 2025

வைகாசி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## யாழில் வாள்வெட்டு; ஒருவருக்கு காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ்ப்பாணம் மாம்பழம் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் 11

# செம்மணிப் புதைகுழியில் 5 மண்டையோடுகள்

### எழுமாற்றாக இடம்பெற்ற அகழ்வின்போது தோண்டத்தோண்ட வெளிப்பட்ட பயங்கரம்



யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ்ப்பாணம் - செம்மணி சிந்துபாத்தி இந்து மாயானத்தில், அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் மனிதப் புதைகுழியில், எழுமாற்றாகத் தோண்டப்பட்டபோது நான்கு வெவ்வேறு இடங்களில் நேற்று ஐந்து மண்டையோடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. 11

## மீண்டும் கொரோனா சிசு பரிதாபச் சாவு!

கொழும்பு, ஜூன் 3
கொரோனாத் தொற்றுக்கு உட்பட்ட நிலையில், காலி தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ஒன்றரை மாதக் குழந்தை நேற்று உயிரிழந்துள்ளது. 11

## பலாலி – இரத்மலானை இடையே மீண்டும் விமான சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 3
பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையிலான விமான சேவைகள் இரண்டு வருடங்களின் பின்னர் மீண்டும் ஆரம்பமாகவுள்ள நிலையில், இதற்கான தகுதிகாண் நடவடிக்கைகள் டேவிட் பீரிஸ் 11



## சைக்கிள் - சங்கு இடையே கொள்கை இணக்கப்பாடு!

### நேற்றுக் கைச்சாத்தானது ஒப்பந்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 3
தமிழ்த் தேசியப் பேரவை மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகிய தரப்புகளிடையே கொள்கை ரீதியான இணக்கத்தை ஏற்படுத்தும் ஒப்பந்த 11

## செம்மணியை மனிதப்புதைகுழியாக அறிவிக்கக் கோரிக்கை

### சட்டத்தரணிகள் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 3
அரியாலை - செம்மணி சிந்துபாத்தி மயானத்தில் மனிதச் சிதிலங்கள் அடையாளம் காணப்பட்ட பகுதியை மனிதப்புதைகுழியாக பிரகடனப் 11

## 31 உள்ளூராட்சி சபைகளுக்கும் ஆட்சியமைக்கும் திகதி அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 3
வடக்கு மாகாணத்தின் 31 உள்ளூராட்சிசபைகளுக்கான முதல்வர், பிரதி முதல்வர், தவிசாளர், உப தவிசாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான திகதி விபரம் வடமாகாண உள்ளூராட்சி 11

### இயற்கைப் பேரிடர்களால்

## யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் ரூ.4,787,469 சொத்துகள் அழிவு!

யாழ்ப்பாணம், ஜூன் 3
2024ஆம் ஆண்டில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடர்கள் காரணமாக, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 47 இலட்சத்து 87 ஆயிரத்து 469 ரூபா பெறுமதியான சொத்துகள் அழிவடைந்துள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட இடர் நிவாரண சேவைகள் நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.
தகவல் அறியும் உரிமைச் 12

### நாடு திரும்பியதும் கைதாகி

## விளக்கமறியலில் இருந்த முதியவருக்குப் பிணை!

யாழ்ப்பாணம், ஜூன் 3
இந்தியாவில் இருந்து இலங்கைக்குத் திரும்பிய முதியவர் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில், அவருக்கு நேற்றுப் பிணை வழங்கப்பட்டுள்ளது.
இந்திய அகதி முகாமில் பல 11

### கரைச்சி, பூநகரி, கரைதுறைப்பற்று

## நேற்றுமுதல் 3 சபைகளிலும் தமிழரசுக் கட்சியின் ஆட்சி!

கிளிநொச்சி, ஜூன் 3
முல்லைத்தீவு கரைதுறைப்பற்று மற்றும் கிளிநொச்சி கரைச்சி மற்றும் பூநகரி பிரதேசசபைகளில் நேற்று முதல் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைத்துள்ளது.
அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கிலுள்ள உள்ளூராட்சி சபைகளில் பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்ட உள்ளூராட்சி மன்றங்கள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலேயே காணப்படுகின்றன. 12

### முச்சந்தி முரளி

'புதைகுழி விசயத்தில இலங்கை உலகசாதனை செய்யப்போகுது கண்டியளோ'

## பிரதமர் பதவியில் மாற்றமா? தெளிவுபடுத்தக் கோரிக்கை!

### பொதுஜன பெரமுன அழுத்தம்



கொழும்பு, ஜூன் 3
பிரதமர் பதவியில் மாற்றம் வருமா? அல்லது இல்லையா? என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும் - என்று ஸ்ரீலங்கா பொதுஜன 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 02.06.2025 | திகதி 02.06.2025 | திகதி 02.06.2025 | திகதி 02.06.2025 | திகதி 02.06.2025 | திகதி 02.06.2025 | திகதி 02.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4090 | சீட்டிழுப்பு இலக்கம் 1157 | சீட்டிழுப்பு இலக்கம் 0116 | சீட்டிழுப்பு இலக்கம் 2196 | சீட்டிழுப்பு இலக்கம் 5848 | சீட்டிழுப்பு இலக்கம் 1878 | சீட்டிழுப்பு இலக்கம் 0423 |
| ஆங்கில எழுத்து K | வெற்றி இலக்கினம் கன்னி | ஆங்கில எழுத்து K | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து H | ஆங்கில எழுத்து J |
| | | | சுப்பர் இலக்கம் 09 | | | |
| வெற்றி இலக்கங்கள் 32 44 74 75 | வெற்றி இலக்கங்கள் 11 19 33 46 | வெற்றி இலக்கங்கள் 1 6 4 8 | வெற்றி இலக்கங்கள் 39 52 70 73 | வெற்றி இலக்கங்கள் 7 9 7 9 0 8 | வெற்றி இலக்கங்கள் 41 48 55 76 | வெற்றி இலக்கங்கள் 7 9 0 8 |
| விசேட எழுத்து K | | | | | விசேட எழுத்து H | |

# வரி செலுத்துவோரின் பணம் பாதுகாக்கப்படும்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 3**

**பொதுமக்களின் ஒவ்வொரு ரூபாவையும் பாதுகாப்பதற்காக, ஜனாதிபதியின் செலவினங்களைக்கூட இயன்றளவு குறைத்து வருகின்றோம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். தேசிய வரி வாரத்தை முன்னிட்டு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஆரம்பநிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வரி செலுத்தும் அனைவரினதும் ஒவ்வொரு ரூபாவும் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்வோம். பொதுமக்களின் பணம் வீணடிக்கப்படுவதைத் தடுப்பதற்கான முதல் முன்மாதிரி இதுவாகும். மக்களுக்கு வினைத்திறனான பொது சேவைகளை வழங்க டிஜிற்றல் மயமாக்கல் அறிமுகப்படுத்தப்படும்.

அரச இயந்திரத்துக்குள் காணப்படும் கறுப்புப் பொறிமுறையை உடைத்து அனைவரும் சட்டத்துக்குக் கீழ்ப்படியும்வகையில் ஒரு செயல்முறை உருவாக்கப்படும் என்றார்.

தேசிய வரி வாரம் நேற்றுத் திங்கட்கிழமை முதல் ஆரம்பமானது. எதிர்வரும் 7 ஆம் திகதி வரையான வாரத்தில் வரி செலுத்துதல் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 02.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | வெற்றி வாரம் 0556 |
| ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கம் 4 2 6 1 9 8 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி 02.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் 2822 | ஆங்கில எழுத்து G | வெற்றி இலக்கம் 03 05 11 37 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 02.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து W | வெற்றி இலக்கம் 31 36 49 52 | வெற்றி வாரம் 4983 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 02.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| சிம்மம் | வெற்றி இலக்கம் 08 09 38 56 | சீட்டிழுப்பு வாரம் 4534 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 02.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து W | சுப்பர் இலக்கம் 08 | வெற்றி இலக்கம் 47 63 69 70 | வெற்றி வாரம் 1998 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 02.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து Y | வெற்றி இலக்கம் 21 22 39 54 | வெற்றி வாரம் 2648 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி 02.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கம் 07 18 42 56 | வெற்றி வாரம் 2131 |

# இலங்கை மருந்துவகைகள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி

கொழும்பு, ஜூன் 3

இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்ட மருந்துவகைகள் முதற்தடவையாக வெளிநாட்டுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ளன.

மருந்துவகைகள் ஏற்றுமதி செய்யும் நிகழ்வில் கலந்துகொண்ட சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, ஏற்றுமதிசெய்யப்படும் மருந்துவகைகளின் தரம் ஒருபோதும் குறையாது என்று தெரிவித்தார்.

45 மில்லியன் பெறுமதியான, இருதய நோயாளிகளுக்கான மருந்துவகைகள் முதற்தொகுதியில் ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ளன. மருந்து உற்பத்திக்குப் பாவிக்கப்படும் மூலப்பொருள்களின் இறக்குமதிக்கு வற்விலக்கு அளித்தமைக்காக கிலெகன் லங்கா நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் நடராஜா சுகாதார அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார். கண்டியிலுள்ள கிலெகன் லங்கா நிறுவனத் தொழிற்சாலையிலேயே மருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. (எ-33-6)



# போலி ஆவணத்தை பயன்படுத்தி கார் இறக்குமதி; ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 3

போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து இரண்டு கார்களை இறக்குமதி செய்த இரட்டைப் பிரஜாவுரிமை உடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வெள்ளவத்தையைச் சேர்ந்த இந்த நபர் பிரிட்டிஷ் இலங்கை இரட்டைப் பிரஜாவுரிமைப் பெற்றவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இரண்டு கார்களும் மேலதிக விசாரணைகளுக்காக சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (எ-33-6)


# நிதியமைச்சின் செயலாளர் இம்மாத இறுதியுடன் ஓய்வு!

## நன்றி தெரிவித்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 3

நிதியமைச்சின் தற்போதைய செயலாளர் மஹிந்த சிறிவர்தன இந்த மாத இறுதியில் நிதியமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து ஓய்வுபெறுவார் என்றும், அதன் பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) மாற்று நிர்வாகப் பணிப்பாளராக தனது கடமைகளை ஏற்றுக்கொள்வார் என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். நேற்றுக்காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற தேசிய வரி வாரத்தின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஏராளமான நிறுவன சீர்திருத்தங்கள் மற்றும் சட்டச்சீர்திருத்தங்களை நிதி அமைச்சின் செயலாளர் என்றவகையில் மஹிந்த சிறிவர்தன மேற்கொண்டுள்ளார். இந்த மாத இறுதியில் அவர் நமது நிதி அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து விடைபெறுவார் என்று நினைக்கிறேன். இலங்கை உட்பட 7 நாடுகளைப் பிரதிநிதித்து வப்படுத்தும் ஆசிய அபிவிருத்தி வங்கியில் மாற்று நிர்வாக பணிப்பாளராக கடமையாற்ற இந்த மாத இறுதியில் அவர் புறப்படவுள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரி சீர்திருத் தங்களைச் செயல்படுத்துவதில் அவர் வகித்த பங்கை நாம் பாராட்ட வேண்டும்என்றார். (எ-இ)



# பிரிட்டன் வர்த்தகத்துதுவர் வர்த்தக அமைச்சருடன் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 3

இலங்கையின் வர்த்தக வாணிப உணவுப் பாதுகாப்புக் கூட்டுறவு அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் பிரிட்டன் வர்த்தகத்தூதுவர் பிரபு ஹானட் மற்றும் பிரிட்டன் உயர்ஸ்தானிகர் அண்ட்ரூ பட்றிக் ஆகியோருக்கிடையே சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இலங்கையில் உள்ள பிரிட்டன் வணிகங்களுக்கான வாய்ப்புகள் மற்றும் சவால்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன. இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு பிரிட்டனின் புதிய டிஜிற்றல் வர்த்தக ஒப்பந்தம்மூலம் வழங்கப்படும் ஆதரவு தொடர்பாவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (எ-25,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளை ஒழிக்க கால அவகாசம் தாருங்கள்!

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 3

**போதைப்பொருள் கும்பல்களை கூண்டோடு ஒழிப்பதற்கு எமக்குச் சிறிது கால அவகாசம் தரவேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

தெற்கில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. போதைப்பொருள் கும்பல்களின் செயற்பாடுகளும் நாட்டில் காணப்படுகின்றன. போதைப்பொருள் கும்பல்களைக் கூண்டோடு ஒழிப்பதற்குச் சிறிது கால அவகாசம் தேவையாகவுள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (எ-33-6)

# உடைமையில் போதைமாத்திரை இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 3

போதைமாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் புன்னாலைக்கட்டுவனில் இளைஞர் ஒருவரும், இணுவிலில் இளைஞர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

புன்னாலைக்கட்டுவனில் நேற்றுமுன்தினம் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும், அவரிடம் இருந்து 20 போதைமாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இணுவில் கந்தசுவாமி ஆலயத்தின் பின்வீதியில் போதைமாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த மானிப்பாயைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்றும், அவரிடம் இருந்து 2 போதைமாத்திரைகள் மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-25,125)

# தோல்வியில் முடிந்த துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, ஜூன் 3

பாணந்துறை, வலானப் பிரதேசத்தில் நேற்றுக்காலை நபர் ஒருவரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று நடந்துள்ளது. ஆயினும் துப்பாக்கி சரியாக இயங்காததால் இந்த முயற்சி தோல்வியடைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளமுயன்று தப்பிச் சென்றுள்ளனர். (எ-இ)

# சுற்றிவளைப்புகளில் 528 பேர் கைது

கொழும்பு, ஜூன் 3

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 528 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ஹெரோய்ன் போதைப்பொருளுடன் 145 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 184 பேரும், கஞ்சாச் போதைப்பொருளுடன் 187 பேரும், கஞ்சா செடிகளுடன் 5 பேரும், போதைமாத்திரைகளுடன் 7 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 163 கிராம் 47 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும், 382 கிராம் 433 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், ஒரு கிலோ 713 கிராம் 629 மில்லிகிராம் கஞ்சாப் போதைப்பொருளும், 46 ஆயிரத்து 12 கஞ்சா செடிகளும், ஆயிரத்து 896 போதைமாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

# போதையில் தாக்குதல்; ஆறு சிப்பாய்கள் கைது

புறக்கோட்டை மிதக்கும் சந்தைக்கு அருகில் மது போதையில் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் ஆறு இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று புறக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். மருதானை காலாட்படைப் பிரிவை சேர்ந்த இராணுவச் சிப்பாய்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர். இராணுவச் சிப்பாயால் தாக்கப்பட்டவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

# முப்படைகளில் இருந்து தப்பியோடிய 2,983 பேர் கைது

கொழும்பு, ஜூன் 3

முப்படைகளில் இருந்து தப்பியோடிய 2 ஆயிரத்து 983 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி முதல் மே மாதம் 30ஆம் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் 2 ஆயிரத்து 261 பேர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள். கடற்படையைச் சேர்ந்த 194 பேரும், விமானப்படையைச் சேர்ந்த 198 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தப்பியோடிய 330 பொலிஸாரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ-இ)



# ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 3

சங்குவேலியில் 25 மில்லிகிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.


சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-25-125)

# குற்றங்களுடன் தொடர்புடைய 20 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 3

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 20 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றச் செயல்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்தவர்கள், நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள், சந்தேகத்துக்குரியவர்களே சுன்னாகம் பொலிஸாரின் விசேட நடவடிக்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ25,125)



# பிரதமர் பதவிக்காக பிமல் முயற்சியாம்!

## கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 3

பிரதமர் பதவியைக் கைப்பற்றுவதற்காக அமைச்சர் பிமல் ரத்நாயக்க கடும் முயற்சிசெய்கின்றார். ஆயினும் ஜனாதிபதி அவருக்குப் பிரதமர் பதவியை வழங்கமாட்டார் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பிரதமர் பதவிக்கு ஜே.வி.பி.யால் சிபாரிசு செய்யப்பட்டிருப்பவர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க. ஆனால் சுனில் ஹந்துன்நெத்தி, லால் காந்த போன்றவர்கள் பிமல் பிரதமராவதை விரும்பவில்லை.

உண்மையில் ஜே.வி.பி.க்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இடையே மோதல் ஆரம்பமாகியுள்ளது. என்னதான் பிரச்சினை வந்தாலும் ஜனாதிபதி பிமலுக்குப் பிரதமர் பதவி கொடுக்கமாட்டார். இந்த அரசுக்குக் கிடைத்த வாக்குகளில் அதிகமானவை தேசிய மக்கள் சக்திக்குக் கிடைத்தவையே. ஆகவே ஹரிணியை பிரதமர் பதவியில் இருந்து நீக்கினால் ஜனாதிபதி பெரும் சிக்கலை எதிர்கொள்வார்-என்றார். (எ-33-75)



# ஜனாதிபதி பதவிக்கு காலம் கனிந்துவரும்!

## தயாசிறி நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 3

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தனக்கு வாய்ப்புக்கிடைக்கும். அதற்கான நேரம் கனிந்துவரும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நான் 1997 இல் இருந்து அரசியல் செய்கிறேன். அரசியல் தளத்தில் எல்லாப் பதவிகளையும் வகித்துள்ளேன். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதியாவதற்கு நேரம் வரும். அநுர குமார திஸாநாயக்கவுக்கு வந்ததுபோன்று-என்றார். (எ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக அமையும். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். மாலையில் குடும்பத்துடன் உறவினர், நண்பர்கள் வீட்டுக்குச் சென்று வருவீர்கள். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சுபச்செலவாக இருக்கும் என்பது ஆறுதல் தரும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சிதரும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன்வாங்கவும்நேரிடும். வெளியில் செல்லும்போது கைப்பொருள்களைப் பத்திரமாக வைத்துக்கொள்ளவும்.

**துலாம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையைப் பூர்த்திசெய்து மகிழ்வீர்கள். மாலையில் பள்ளி, கல்லூரிக் கால நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சிசெய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும். சிலருக்கு திடீர்ப்பயணங்களும் அதனால் ஆதாயமும் உண்டாகும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

பிரமந்தனாறுக் குளத்தின் கீழ்

# தீர்மானங்களை மீறி விவசாயம்; நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

**கிளிநொச்சி, ஜூன் 3**

**கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய பிரமந்தனாறுக் குளத்தின் கீழ் இந்த வருட சிறுபோகம் மற்றும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதை அதிகாரிகள் உறுதிப்படுத்தவேண்டும் என்று பிரமந்தனாறுக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

பிரமந்தனாறுக் குளத்தில் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளமையால், கமக்கார அமைப்பு மற்றும் பொதுமக்களின் கருத்துகளுக்கு அமைய எவருக்கும் பாதிப்பு ஏற்படாதவகையில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆயினும் கூட்டத்தின் தீர்மானங்களுக்கு மாறாகச் சிலர் வாய்க்கால்களை மறித்துக் கிராமத்துக்குள் நெற்செய்கை மேற்கொள்வதால் மேட்டு நிலப் பயிர்ச்செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பொதுமக்களின் குடியிருப்புகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதிகாரிகள் நேரடியாக களப்பயணம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்து கூட்டத்தின் தீர்மானங்களுக்கு அமைய விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்யவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-214)

# திருவிளையாடற் புராணச் சொற்பொழிவு

சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் நடத்தப்படும் வாராந்தத் திருவிளையாடற் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் நிகழ்வில், பரஞ்சோதி முனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ. தகுமரனின் "எழுகடலழைந்த படலம்" எனும் தொனிப்பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# நடமாடும் சேவை

**யாழ்ப்பாணம், ஜூன் 3**

பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் நடத்தும் நடமாடும் சேவையொன்று பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 9 மணிதொடக்கம் மாலை 4 மணி வரை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த நடமாடும் சேவைகள் வழங்கப்படவுள்ளன. பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகளை மேற்கொள்ள வேண்டியவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் முதியோர் அடையாள அட்டைகள் தொடர்பான சேவைகளும் இதன்போது முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-இ)

அம்பிகை துணை



பச்சிலைப்பள்ளி,முகாவில், இயக்கச்சி,
அருள்மிகு திரியாய் அம்பாள் (பர்வதவர்த்தினி) தேவஸ்தான
திருக்குளிர்த்திப் பொங்கல் விழா
06.06.2025 வெள்ளிக்கிழமை

அம்பிகை மெய்யடியார்களே!

நிகழும் விசுவாவசு வருடம் வைகாசித் திங்கள் 23ஆம் நாள் 06.06.2025 வெள்ளிக்கிழமை இயக்கச்சி. முகாவில்.திரியாய் அம்மன் ஆலய வருடாந்த திருக் குளிர்த்திப் பொங்கல் விழா இடம்பெறும். அன்று பகல். இரவு தொடர்ந்து விசேட அபிசேக ஆராதனைகளும் காவடி. பால்செம்பு.தீச்சட்டி. கரகம். பறவைக்காவடிகள் போன்ற நேர்த்திக்கடன் நிறைவேற்றல்களும் தொடர்ந்து நீராகாரமும். மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

பூசை நேரம்- மதியம் 1.00 மணி 06.06.2025 வளிவெட்டு பூசை 07.06.2025 காலை 05.00 மணி அதனை தொடர்ந்து பொதுக்கூட்டமும் நிர்வாக தெரிவும் இடம்பெறும்

குறிப்பு :-

- அன்றைய நாள் பாதுகாப்பு. முதலுதவி.சுகாதாரம் பேணல். குடிநீர் வசதி போன்றவைகள் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் திருப்திகரமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- வர்த்தகத்தில் ஈடுபடுவோர் தமது பதிவுகளை 06.06.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு முன்பதாக மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 555 2123, 077 347 4011, 077 494 4490

- விசேட போக்குவரத்து ஒழுங்கு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி தனியார் போக்குவரத்து சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- ஆலயத்தின் வளர்ச்சிகருதி அர்ச்சனைப் பொருட்கள் ஆலய பரிபாலன சபையினரால் விற்பனை செய்யப்படும்.
- எந்தவொரு தனிநபரும் கற்பூரம், ஊதுபத்தி போன்றவை ஆலய வளாகத்தினுள் விற்பனை செய்ய முடியாது.
- உணவுப் பண்டங்களை விற்பனை செய்வோர் சுகாதார பணிமனையில் அனுமதி பெற்று வருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஒலி பெருக்கி உபயம்:- மு.தங்கவேல் குடும்பம் (உடுத்துறை வடக்கு)
ஒளி அமைப்பு உபயம்:- க.இளையதம்பி குடும்பம் (வேம்படி உடுத்துறை வடக்கு)

வழமை போன்று பொங்கல் விழா இரவு பகலாக நடைபெறும்.

…கச்சி, (CR/45268) J-1 -ஆலய பரிபாலன சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன.
ஒன்று காலம் இன்னொன்று, மௌனம்

– அப்துல் கலாம் –

## நினைவுகள் வலுப்பெறவேண்டும்

யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்டு 44ஆவது ஆண்டு நினைவுநிகழ்வுகள் யாழ்ப்பாணப் பொதுநூலகம் உட்பட ஓரிரு பகுதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இம்முறை கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றன. வழக்கமான அரசியல் பரபரப்புகள் மற்றும் இதர அன்றாடக் காரியங்களுக்குள் பொதுநூலகம் எரித்தழிக்கப்பட்ட நினைவுநாள் நிகழ்வுகள் அஸ்தமித்துவிட்டன என்பதே உண்மை. ஆத்மார்த்தமான நடவடிக்கைகள் எவையும் எந்தவொரு இடத்திலும் இடம்பெற்றதாகப் பதிவில்லை. தமிழ்த்தலைமைகள் இழைத்துவரும் இந்த வரலாற்றுத்தவறு இம்முறையும் நேர்ந்திருக்கின்றது.

யாழ்ப்பாணப் பொதுநூலகம் என்பது தமிழர்களின் அடையாளங்களில் ஒன்று. 94 ஆயிரம் புத்தகங்கள், ஓலைச்சுவடிகள் என அரியபெரும் பொக்கிஷங்களுடன், சிங்களக் காடையர்களால், நூற்றுக்கணக்கான பொலிஸார் பார்த்திருக்க இடம்பெற்ற இந்தப் பேரழிவுச்செயலை நாங்கள் வரலாறுதோறும் மிகக் கச்சிதமாகக் கடத்தவேண்டும். தெற்காசியாவின் மிகப்பெரும் அடையாளங்களில் ஒன்றாக உயரவேண்டிய பொதுநூலகம் எதற்காக அழிக்கப்பட்டது? என்பதை நன்கு கட்டமைக்கப்பட்ட நிகழ்வுகள்மூலம் கடத்தும்போதே, அதன் தாற்பரியமும், கடந்தகால வரலாறும் எங்களின் இளைய சந்ததியினரைச் சென்றடையும்.

ஆனால் நடப்பது என்ன? வருடாவருடம் யாழ்ப்பாணப் பொதுநூலகத்தில் ஒரு நினைவுநாள் நிகழ்வு நடைபெறும். சில வாசகர்கள் செல்வார்கள். அத்துடன், அந்த விடயம் முற்றுப்பெற்றுவிடும். மீண்டும் அடுத்த வருடத்தில் அதே நாள்களில் அதே காட்சிகள். இப்படியான மனோநிலையில் இருந்துகொண்டு இத்தகைய வரலாற்றுத்தவறுகளை இழைப்பதால்தான், மே 31ஆம் திகதி பொதுநூலகம் எரிக்கப்பட்டதா? அல்லது ஜூன் மாதம் 1ஆம் திகதி பொதுநூலகம் எரிக்கப்பட்டதா? என்பதில் தெளிவில்லாதன்மை இன்றளவும் காணப்படுகின்றது. விவாதத்துக்கும் மாற்றுக்கருத்துகளுக்கும் உட்படவேண்டிய விடயமா இது?. கடந்தகாலங்களில் வரலாற்றைக் கடத்துவதில் விடப்பட்ட தவறுகள், இன்று இவ்வாறான விவாதங்களை ஏற்படுத்தியிருப்பதைப் போன்று, இன்று நாங்கள் விடும் தவறுகள் எதிர்காலத்தில், யாழ்ப்பாணப் பொதுநூலகம் தீக்கிரையாக்கப்பட்டதா? அல்லது தீக்கிரையானதா? என்ற விவாதங்கள் ஏற்படவும் காரணமாகிவிடும்.

எனவே, யாழ்ப்பாணப் பொதுநூலகம் தீக்கிரையாக்கப்பட்டமையை நினைவுகூரும்வகையில் அரசியற்கட்சிகள் அனைத்தும் இணைந்து பொதுவான நினைவேந்தல் கட்டமைப்பை உருவாக்கவேண்டும். வரலாற்றை வலுவாகக் கடத்துவதில், எந்தச் சமரசங்களுக்கும் இடமில்லை.


நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.
இரவில் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
'எங்கள் பட்டியலில் இவர்பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?'
என்று சினந்தனர்.

'இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஓர் ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று
ஆகையினால்...
என்றனர் அவர்கள்.

'சரி சரி
உடனே மறையுங்கள் பிணத்தை'
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.
சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச்சென்றனர்.

தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோவாத சூத்திரத்தினைக்
கொழுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான் சாம்பரானது.

-பேராசிரியர் எம்.ஏ.நுஃமான்




## ஆர்.ரி.ஐ. ஆணைக்குழுவின் தலைவர் பதவி வெற்றிடம்!

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை

கொழும்பு, ஜூன் 3

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பதவி வெற்றிடமாக இருப்பது தொடர்பில் கவலை வெளியிட்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி பதவிவிலகியதில் இருந்து அந்தப் பதவியை நிரப்ப எந்த நியமனமும் செய்யப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

தலைவர் இல்லாதமை ஆணையகம் திறமையாகச் செயற்படுவதற்கும் அதன் கடமைகளைச் செய்வதற்கும் உள்ள திறனைத் தடுக்கிறது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தப் பதவி வெற்றிடத்துக்கு உடனடியாக நியமனம்செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மேலும் வலியுறுத்தியுள்ளது. (எ-இ)

### நாணயமாற்று வீதம்



கொழும்பு, ஜூன் 3

இலங்கை மத்திய வங்கி நேற்றுத் திங்கட்கிழமை வெளியிட்ட நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை 303.7455 ரூபாவாகவும் கொள்வனவு விலை 295.3567 ரூபாவாகவும் காணப்பட்டது.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் விற்பனை விலை 411.0517 ரூபாவாகவும், கொள்வனவு விலை 396.9029 ரூபாவாகவும் காணப்பட்டது. யூரோ ஒன்றின் விற்பனை விலை 346.7542 ரூபாவாகவும், கொள்வனவு விலை 333.9051 ரூபாவாகவும் காணப்பட்டது. (எ-இ)

## மூதறிஞர் சிவலிங்கம் காலமானார்

யாழ்ப்பாணம், ஜூன் 3

இணுவிலைச் சேர்ந்த கலா பூஷணம் மூதறிஞர் மூத்த தம்பி சிவலிங்கம் நேற்றுமுன்தினம் தனது 92 ஆவது வயதில் காலமானார்.

முப்பது வருடங்களாகக் கிராம அலுவலராகச் சேவையாற்றிய இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தொடர்பான வரலாற்று நூலையும் எழுதி வெளியிட்டுப் பலரது பாராட்டைப் பெற்றவர்.

தனக்குவரும் வருமானத்தை முழுமையாக நூல்கள் வெளியிடப் பயன்படுத்திய இவர் தனது வாழ்வின் இறுதிவரை இலக்கியத்தையும், வாசிப்பையும் அதிகளவில் நேசித்தவர். ஆறு மாதங்களுக்கு முன்னரும் இவர் இணுவில் சிவகாமி அம்மன் ஆலயம் தொடர்பான வரலாற்றை நூலாக எழுதி வெளியிட்டிருந்தார். (எ-66)

## குறுஞ்செய்திக் கட்டமைப்பு "ஹக்"

கொழும்பு, ஜூன் 3

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் குறுஞ்செய்திக் கட்டமைப்பு "ஹக்" செய்யப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. ஆயினும் அதிகாரிகள் இது தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடவில்லை.

சமூக ஊடகங்களில் பலர் தங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உத்தியோகபூர்வ குறியீட்டிலிருந்து தொடர்பற்ற குறுஞ்செய்திகள் வந்துள்ளன என்று தெரிவித்துள்ளனர். (எ-இ)

## இலங்கை வருகிறார்

### அவுஸ்திரேலியப் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஜூன் 3

அவுஸ்திரேலிய துணைப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸ், இன்று செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்வார் என வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது. துணைப் பிரதமர் மார்லஸ், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரைச் சந்திக்கவுள்ளார். அத்துடன் அவர் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவையும் சந்திப்பார்.

பாதுகாப்புத் துணை அமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) அருணா ஜெயசேகரவுடன் மார்லஸ் இருதரப்புக் கலந்துரையாடல்களை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
புதன்கிழமை- வைகாசி 20
04.06.2025
சுபநேரம் : 04.22- 05.52
ராகுகாலம் : 11.52 - 01.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாற்றுத்திறனாளிகளுக்கு சுகாதாரப்பொதி வழங்கல்

பளை, ஜூன் 3

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் வேள்ட் விஷன் நிறுவனத்தின் நிதியுதவியுடன் 10 தொடக்கம் 18 வயதுக்குட்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான சுகாதாரப்பொதி வழங்கும் நிகழ்வு, பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-25,9)



# கலந்துரையாடல்

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் லக்ஸ்மன் அபயசேகர, யாழ். மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபனை கடந்த திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

கலந்துரையாடலில் அச்சுவேலிக் கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி, சுற்றுலாத்துறை மேம்பாடு, தாழையடி குடிநீர்த்திட்டம், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டங்கள், வங்கிக்கடன் முறைமை,தொழில் தேடுவோருக்கான வேலைத்திட்டங்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. (ச-25,66)



# மேற்பார்வை குடும்பநல அலுவலர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

வடக்கு மாகாண சுகாதார மேற்பார்வை குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு நிலவிய வெற்றிடங்களுக்குத் தகுதிவாய்ந்த குடும்பநல உத்தியோகத்தர்கள் மேற்பார்வை குடும்பநல உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சினால் கடந்த வாரம் இந்த நியமனம் வழங்கப்பட்டது. நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடமாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர்கள், மேற்பார்வை குடும்பநல உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-125)



கிளிநொச்சி மாவட்டத்தில் கண்ணிவெடியகற்றல் செயற்பாட்டின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல், நகர அபிவிருத்தி நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எம். நயீமுதீன் தலைமையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத் திறன் விருத்தி நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கலந்துரையாடலில் கண்ணிவெடியகற்றல் செயற்பாட்டில் ஈடுபடும் நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர். (ச-25,113)





அனலைதீவு அருணோதயா முன்பள்ளிச் சிறார்களின் சிறுவர் சந்தை முன்பள்ளி மண்டபத்தில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது. (ச-25,9)



சாவகச்சேரிநகர் புவேந்தன் முன்பள்ளியின் மாதிரிச்சந்தை நிகழ்வு நிர்வாகக் குழுத்தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ச-41-159)







வலைப்பந்தாட்டம்


# வெற்றிவாகை சூடியது சண்டிலிப்பாய் இந்து

யாழ்.மாவட்ட 16 வயதுப் பிரிவுப் பெண்கள் அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. 2 ஆம் இடத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும், 3 ஆம் இடத்தை அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரியும், 4 ஆம் இடத்தை இராமநாதன் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தாய் மடியில்
09 ❖ 12 ❖ 1949



இறைவனடியில்
01 ❖ 06 ❖ 2025

### திரு. ஜோசப் கருணாரட்ன

யாழ்.நல்லூரை பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தை 32nd Laneஐ வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு. ஜோசப் கருணாரட்ன அவர்கள் 01.06.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற அருள்ஜோதி (ஓய்வு பெற்ற Nuffield பாடசாலை அதிபர்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜோசப் (இளையகுட்டி) மேரி பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற விஜயரதி பரமநாதன் அவர்களின் அன்பு சகோதரனும், நிரோஜினி (Managing Director, Primes Joyce Global (pvt) Ltd & Canadian Migration Consultancy (Private) Limited) அவர்களின் அன்புத் தந்தையாரும் சுபக்ஷன் (Director of Primes Joyce Global (Pvt) Ltd & Canadian Migration Consultancy (Private) Limited) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 02.06.2025 திங்கட்கிழமை பிற்பகல் 12.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை இல.18, 32nd Lane வெள்ளவத்தை கொழும்பு 06ல் அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 03.06.2025 இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிமுதல் யாழ்ப்பாணம் பரி.யாக்கோபு ஆலய (முத்திரைச்சந்தி) சபை மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 04.06.2025 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று ஆலய சேமக்காலையில் (Church Cemetary) நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

தொலைபேசி இலக்கம்:
1) 0777 790 111 (நிரோஜினி - மகள்)
2) 0771 390 879 (சுபக்ஷன் - மருமகன்)

## கவுணாவத்தை வேள்விப் பொங்கல் உற்சவம்

*யாழ்ப்பாணம், ஜுன் 3*

கருகம்பனை கவுணாவத்தை அந்திராணை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த மரபுவழி வேள்விப் பொங்கல் உற்சவத்துக்கான விளக்குவைத்தல் உற்சவம் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

வேள்விப் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்று எட்டாம்மடை உற்சவம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

வேள்விப் பொங்கல் தினத்தன்று வழமை போன்று கிடாய்கள், சேவல்கள் காணிக்கையாக்கப்பட்டு நேர்த்திகள் நிறைவேற்றப்படும் என்பதுடன் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக வேள்விப்பொங்கல் இடம்பெறும் என ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (எ-41-100)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜுன் 3

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப்படனத் தொடரின் 24ஆவது சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்த குரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள் ஆகியோர் ஆசியுரையையும், பரிபாலன சபைத்தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையையும், இளஞ்சைவப்புலவர், பிரசங்கச்சுடர் நித்திய பாபுதரன் "குமாரபுரிப் படலம்" எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவையும் வழங்கவுள்ளனர். சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

## 3 ஆண்டுகள் உங்கள் நினைவுகளுடன்



### செல்வராணி சகாதேவன்

(ஓய்வு நிலை அதிபர் யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

தோற்றம் 27.09.1952 — மறைவு 07.06.2022

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழ்ந்திருப்போம்

47, செல்வநிலாவகம்,
புகையிரதநிலைய வீதி,
கொக்குவில்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
18 • 03 • 1959



மறைவு
30 • 05 • 2025

### விமலாதேவி உதயகுமார்

பழைய பொலிஸ் நிலைய வீதி, சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும், அவுஸ்ரேலியா மெல்பேனை வசிப்பிடமாகவும் கொண்ட விமலாதேவி (மாலா) உதயகுமார் அவர்கள் கடந்த (30.05.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகேந்திரம் - பூமணி (திருகோணமலை) தம்பதியரின் அன்பு மருமகளும், உதயகுமார் (உதயன் மாஸ்ரர்) அவர்களின் பாசமிகு மனைவியும், சிந்துயா, பிரவிந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆரணியின் அன்பு மாமியாரும், எவலி, ஷகி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், மல்லிகாதேவி, சந்திராதேவி, கருணாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜீவகுமார், வசந்தகுமார், மதனகுமார் காலஞ்சென்ற தட்சணகுமார், குசேலகுமார், நித்தியகுமார், தாவறஞ்சினி, நிர்மலனி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை அவுஸ்ரேலியாவில் நடைபெறும். அன்றையதினம் காலை பழைய பொலிஸ் நிலைய வீதி, சுன்னாகம் தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலி செலுத்தப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்
(CS/58457) J-1 கருணாநிதி - 077 690 5857

## மரண அறிவித்தல்

பிறப்பு
28 ❖ 02 ❖ 1977



இறப்பு
02 ❖ 06 ❖ 2025

### இராசரெத்தினம் ராஜ்குமார்

(அலுவலக உதவியாளர், யாழ் பல்கலைக்கழகம்)

தொல்புரம் மத்தி சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், 126, 2ம் குறுக்குதெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரெத்தினம் ராஜ்குமார் அவர்கள் நேற்று (02.06.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இராசரெத்தினம்-புவனேஸ்வரி தம்பதியின் பாசமிகு மகனும் சண்முகலிங்கம்-சரஸ்வதி தம்பதியின் பாசமிகு மருமகனும் பத்மா (ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் ஐதுசாந் (தரம்-12 சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்), பவித்தரா (தரம்-10, யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரஞ்சனா, ரவீனா, ரசிதா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 757 3049

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNOUNCEMENT



**Ms. Subramanium Shanthikala**
ID No. 848143782V

We announce to our valued customers, and all concerned that the above-mentioned person is no longer in our employment. She has no authority whatsoever to transact any business or to receive any money or to act in any way for and on our behalf. We request customers to exercise caution against unauthorized tampering of the MITSUBISHI elevators and escalators which are installed, tested and maintained by the company. Being the Original Equipment Manufacturer with genuine spares, we advise that those who ignore this message will be taking their own risk on performance of the equipment and safety of the passengers and general public

A G MELCO Elevator Company Lanka (Private) Limited
464, 3rd – 5th Floors, Galle Road, Colombo - 03, Sri Lanka
Tel: +94-11-706 6229 | Fax: +94-11-751 5154
email: srilanka@agmelco.com web: www.agmelco.com

# ANNOUNCEMENT



**Mr. Krishnananthan Garnan**
ID No. 791821940V

We announce to our valued customers, and all concerned that the above-mentioned person is no longer in our employment. He has no authority whatsoever to transact any business or to receive any money or to act in any way for and on our behalf. We request customers to exercise caution against unauthorized tampering of the MITSUBISHI elevators and escalators which are installed, tested and maintained by the company. Being the Original Equipment Manufacturer with genuine spares, we advise that those who ignore this message will be taking their own risk on performance of the equipment and safety of the passengers and general public

A G MELCO Elevator Company Lanka (Private) Limited
464, 3rd – 5th Floors, Galle Road, Colombo - 03, Sri Lanka
Tel: +94-11-706 6229 | Fax: +94-11-751 5154
email: srilanka@agmelco.com web: www.agmelco.com

# INVITATION FOR BID 2025/10
## Regional Directorate of Health Service Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall meet the CIDA registration and qualification requirements. Additional details are provided in the Procurement Document.
4. Interested eligible bidders may obtain further information from address given below in 5 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services, health village Pannai Jaffna. (T.P:0212222278, Fax: 0212229971) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| CATEGORY II | Document Issuing/Purchasing Period | | | From 03.06.2025 until 16.06.2025 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 09.06.2025 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 17.06.2025 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2025/CBG/W/07 | Repair and Renovation of Nursing Officers Quarters at Base Hospital, Kayts, Jaffna. | 5.21 | 106 Days | C 7 or above (Buildings) | 3,000.00 | 53,000.00 | Till 29.09.2025 |
| NP/04/41/2025/PSDG/W/10 | Repair and Renovation of Male Ward at Divisional Hospital, Chankanai, Jaffna | 7.16 | 116 Days | C7 or above (Buildings) | 3,000.00 | 72,000.00 | Till 29.09.2025 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service, Jaffna.**

CR/45266 J-1

## வீடு பராமரிக்க ஆள் தேவை

ஆஸ்பத்திரி வீதி நிற்சாமம் சங்கானையில் இருக்கும் வீட்டினை பராமரிக்க ஆள் தேவைப்படுகின்றது. அனுபவம் வாய்ந்த பெண் பராமரிப்பாளர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரடியாக பேசி தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு: 076 605 0120**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 02 . 1950



மறைவு 20 . 05 . 2021

## அமரர் இந்துமதி நடேசு

**திதி : வளர்பிறை அட்டமி (2025.06.03)**

அம்மா நீங்கள் எமைப் பிரிந்து
நான்கு ஆண்டுகள் கடந்து சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில்
என்றும் உயிர்ப்பாய் நிலைத்திருக்கும்
காலங்கள் கரைந்தாலும்
ஆயிரம் உறவுகள் அருகிருந்தாலும்
எம் கண்களில் ஒளிரும் உங்கள் அன்பின் வெளிச்சம்
நான்கு ஆண்டுகள் அல்ல பல ஆண்டுகள் ஆனாலும்
மறவோம் உங்கள் திருமுகத்தை

381, கொழும்புத்துறை வீதி
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 58447) E-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01 . 03 . 1956

மறைவு
30 . 05 . 2020

## அமரர் ஆறுமுகம் உருத்திரமூர்த்தி

**(திதி : அஷ்டமி 03.06.2025)**

சுதுமலை அம்மன் கோவிலின் நிரந்தர
தொண்டனாக அடியார்களுக்கு அடியவர் ஆனாய்
அம்பாளுக்கு ஓர் அபிராமி பட்டரானாய்
நிஜமாக நீங்கள் மறைந்து ஐந்தாண்டு ஆனதோ
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
உங்களை நினைத்து தினம் தினம்
நான் ஏங்கித் தவிக்கிறேன்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை
என் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் தொடரும்
உங்களை என் உள்ளத்தில் வைத்து பூஜிப்பேன்

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை பிரார்த்திக்கின்றேன்

**சுதுமலை வடக்கு,
சுதுமலை**

**ஆருயிர் மனைவி
உருத்திரமூர்த்தி பவாணி (ஆசிரியர்)**

# மரண அறிவித்தல்



தோற்றம்
05 . 06 . 1976

01 . 06 . 2025

## செல்லையா திருமாவளவன் (கண்ணன்)

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா திருமாவளவன் (கண்ணன்) அவர்கள் கடந்த (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை செல்லையா (தையிட்டி) மற்றும் கமலாதேவி (நாயன்மார்கட்டு) தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் - உமாதேவி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் ரூபவதனா அவர்களின் பாசமிகு கணவரும் லிரோசன்குமார் அவர்களின் பாசமிகு தந்தையும் திருச்செல்வம், காலஞ்சென்ற திருவேந்தன் மற்றும் திருமகள் (சுவிஸ்), திருவிளங்கம், திருக்குமரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவராணி, பாலன், சந்திராதேவி, கவிதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் சங்குவேலி வடக்கில் உள்ள இல்லத்தில் எதிர்வரும் 2025.06.04 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.**

**தகவல்:
குடும்பத்தினர்
077 363 8471**

(CS 8458) E-1

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 05.05.2025 திங்கட்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் தில்லையம்பலவாணர் கோபாலகிருஷ்ணன்

(விவாக இறப்பு, பிறப்பு பதிவாளர் உரிமையாளர் சபேஸ் ரேடர்ஸ்- புத்தூர்
சமாதான நீதவான், நிரந்தர தர்மகத்தா உறுப்பினர்,
யா/சோமாஸ்கந்தக் கல்லூரி- புத்தூர்)



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.06.2025) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியள வில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் நாளை (04.06.2025) புதன்கிழமை வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் அவரது இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம்
29.10.1968

மறைவு
05.05.2025

**புத்தூர் மேற்கு,
புத்தூர்.**

**குடும்பத்தினர்
077 873 3407**

(CS/58459) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புவியியல் துறையின் ஏற்பாட்டில் எழுத்தாளரும், கட்டடக் கலைஞருமான இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் எழுதிய யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு (1621 1948) எனும் நூலின் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை மாலை 3 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் தலைமையில் நூல் வெளியீடு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் புவியியல் துறைத் தலைவரும், சிரேஸ்ட விரிவுரையாளருமான நாகமுத்து பிரதீபராஜா நூலின் அறிமுகவுரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண்கலைத்துறையைச் சேர்ந்த பேராசிரியர். தா. சனாதனன், படைப்பாளியும், அரசியல்சமூக விமர்சகருமான ம. நிலாந்தன் ஆகியோர் நூலின் மதிப்பீட்டுரையையும் ஆற்றவுள்ளனர். இறுதியாக நூலாசிரியர் ஏற்புரை நிகழ்த்தவுள்ளார். (ம-125-66)

# வடக்கில் ஒவ்வோர் ஆண்டும் பாடசாலைகளுக்கு மூடுவிழா

## வடக்கு ஆளுநர் கவலை

**யாழ்ப்பாணம், ஜூன் 3**

**வடக்கில் ஒவ்வோர் ஆண்டும் பாடசாலைகள் மூடப்பட்டுவருகின்றன. தரம் 1 அனுமதிக்காகவரும் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவடைந்துவருகின்றது. இது எமக்கு ஆபத்தான நிலைமை. அனைவரும் இதனைக் கவனத்திலெடுக்கவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

யாழ். குரும்பசிட்டி பொன். பரமானந்தர் மகாவித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுப் பரிசளிப்பு விழாவும், 'பரமானந்தம்' மலர் வெளியீடும் சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் க. வசந்தரூபன் தலைமையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரால் இந்தப் பிரதேசங்கள் பாதிக்கப்பட்டது மாத்திரமல்ல இந்தப் பாடசாலையும் பாதிக்கப்பட்டது. பல குடும்பங்கள் நாட்டைவிட்டு வெளியேறும் நிலைமையும் ஏற்பட்டது.

மீள்குடியமர்ந்த பின்னர் இந்தப் பாடசாலையை முன்னேற்றுவ தென்பது கடினமானதுதான். ஆனாலும், அதைச் செய்துள்ளார்கள். ஒரு பாடசாலையின் வளர்ச்சி என்பது கல்வியின் தரத்தை உயர்த்துவது மாத்திரமல்ல மாணவர்களின் பண்புகளையும் மேம்படுத்துவதில்தான் தங்கியிருக்கின்றது. இங்கு கற்கின்ற மாணவர்கள் எதிர்காலத்தில் இந்தப் பிரதேசத்தின் வளர்ச்சிக்காகப் பங்காற்றவேண்டும். இன்றும் எங்கள் இளம் சமூகத்திடம் வெளிநாட்டு மோகம் தொடர்ந்தும் இருக்கின்றது.

இங்கிருந்து முன்னேறுவோம் என்ற எண்ணம் இல்லை. இங்கிருந்து சாதிக்க இளையோர் எதிர்காலத்தில் முனைய வேண்டும் - என்றார். (ச-66)

# 'வவுனியாவின் குரல் - 2025' இறுதிப்போட்டி நிகழ்வுகள்

வவுனியா, ஜூன் 3
வவுனியா இசை ஆர்வலர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் முகமாக வவுனியாப் பிரதேசசெயலகம், பிரதேச கலாசாரப் பேரவை ஆகியவற்றின் ஏற்பாட்டில், "வவுனியாவின் குரல் 2025" பாடல் போட்டியின் இறுதிப்போட்டி நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டன.

இரு பிரிவுகளாக இடம்பெற்ற போட்டியில் 18 வயதுக்குட்பட்ட பிரிவில் முதலாம் இடத்தை ச. சுருதியும், இரண்டாம் இடத்தை ச. ரொசானியும், மூன்றாம் இடத்தை யோ. கிர்ஸ்சாத்தும் பெற்றுக்கொண்டனர். மேற்பிரிவில் முதலாம் இடத்தை ம. சிவசக்தியும், இரண்டாம் இடத்தை சா. கலாரஜினியும், மூன்றாம் இடத்தை அ. மெலிஸ்ரன், செ. வினோஜன் ஆகிய இருவரும் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் நா.கமல
தாசன், பிரதேச செயலாளர் இ.பிரதாபன், உதவிப் பிரதேச செயலாளர் பு.உமாநந்தினி, கலாசார உத்தியோகத்தர் க.அபிராமி, அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.துஜான் உட்பட பிரதச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ச-25,110)

## கலாபூஷண அரச விருது விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 3
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியன இலங்கையின் மூத்த கலைஞர்களை அரச அங்கீகாரத்துடன் விருது வழங்கி மதிப்பளிப்பதற்காக ஆண்டுதோறும் ஏற்பாடுசெய்யப்படும் கலாபூஷண அரச விருதுவிழாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

60 வயது பூர்த்தியடைந்த மூத்த கலைஞர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கமுடியும்.

தாங்கள் சிரேஷ்ட கலைஞர் என்பதை சான்றுபடுத்துவதற்காக தங்களிடம் உள்ள சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும், விண்ணப்பத்தை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,9)

## மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 11 . 1943
இறப்பு 01 . 06 . 2025



**நாகமணி சரோசாதேவி**

நயினாதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது கொக்குவில் பிரம்படி 1ம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி சரோசாதேவி அவர்கள் நேற்று முன்தினம் (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை அம்பாளின் பாதங்களை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசிதம்பரம்-தனலெட்சுமி தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரை-சுந்தரேஸ்வரி தம்பதியின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரை நாகமணி (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் பூரணசுந்தரி (லண்டன்), தயாளசௌந்தரி (ஆசிரியர் யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), பொன்சுந்தரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சிவானந்தர், தயாபரன் மற்றும் சிவபாலன், ஜெயபாலன், ஜெகபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெகதீஸ்வரன் (லண்டன்) நிரஞ்சன் (பணியாளர் யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் மிருஷா, அபிஷா, ஹரிசன், அட்சரன், சாஹித்தியன், மதுஷிகா, ஷானுயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தியாகமணி, கேசவராணி, புவனேஸ்வரி, திலகேஸ்வரி, கேதீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சியாமளாதேவியின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (04.06.2025) புதன்கிழமை கொக்குவில் பிரம்படி 1ம் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இல 72/12 A, பிரம்படி,
முதலாம் ஒழுங்கை,
கொக்குவில்.**

தகவல்:
குடும்பத்தினர்
077 746 6333

# வலித்தூண்டல் - சேந்தான்குளம் வீதியைச் சீரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 3
இளவாலை, வலித்தூண்டல் முதல் சேந்தான்குளம் வரையுள்ள பருத்தித்துறை பொன்னாலை யாழ்ப்பாணம் வீதியில் புனரமைக்கப்படா துள்ள வீதியைப் புனரமைக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அண்மையில் நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பொன்னாலை பருத்தித்துறை வீதி புனரமைக்கப்பட்ட போதும், அதனுடன் தொடர்புபட்ட வீதிகளும் புனரமைக்கப்பட்டன. ஆயினும் இளவாலை, வலித்தூண்டல் ரோமன் கத்தோலிக்கப் பாடசாலைக்கு அண்மையிலிருந்து சேந்தான்குளம் வரையான வீதி புனரமைக்கப்பட வில்லை.

இந்த வீதியூடாகப் பொதுப்போக்குவரத்து, அம்புலன்ஸ்சேவை எனப் பல போக்குவரத்துச் சேவைகள் நடைபெறுகின்றன. இந்த வீதியை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 உள்ளூராட்சி...

ஆணையாளர் தேவந்தினி பாபுவால் அறிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான அட்டவணை வருமாறு: (அ-ம-26-66)

| தொ. இல. | உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | திகதி | நேரம் | கூட்டப்படும் இடம் |
|---|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாணம் மாநகர சபை | 13.06.2025 | மு.ப.8.30 | யாழ்ப்பாணம் மாநகர சபை சபா மண்டபம். |
| 2. | நல்லூர் பிரதேச சபை | 13.06.2025 | பி.ப.12.30 | நல்லூர் பிரதேச சபை சபா மண்டபம். |
| 3. | சாவகச்சேரி நகர சபை | 13.06.2025 | பி.ப.03.00 | சாவகச்சேரி நகர சபை சபா மண்டபம். |
| 4. | வவுனியா மாநகர சபை | 16.06.2025 | மு.ப.09.00 | வவுனியா மாநகர சபை சபா மண்டபம். |
| 5. | வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை | 16.06.2025 | பி.ப.02.00 | வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை சபா மண்டபம். |
| 6. | பருத்தித்துறை நகர சபை | 17.06.2025 | மு.ப.08.30 | பருத்தித்துறை நகர சபை சபா மண்டபம். |
| 7. | பருத்தித்துறை பிரதேச சபை | 17.06.2025 | மு.ப.11.30 | பருத்தித்துறை பிரதேச சபை சபா மண்டபம். |
| 8. | வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபை | 17.06.2025 | பி.ப.02.30 | வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 9. | வல்வெட்டித்துறை நகர சபை | 18.06.2025 | மு.ப.08.30 | வல்வெட்டித்துறை நகர சபை சபா மண்டபம். |
| 10. | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை | 18.06.2025 | மு.ப.11.30 | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 11. | வலிகாமம் வடக்கு பிரதேச சபை | 18.06.2025 | பி.ப.02.30 | வலிகாமம் வடக்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 12. | காரைநகர் பிரதேச சபை | 19.06.2025 | மு.ப.08.30 | காரைநகர் பிரதேச சபை சபா மண்டபம். |
| 13. | வலிகாமம் மேற்கு பிரதேச சபை | 19.06.2025 | மு.ப.11.30 | வலிகாமம் மேற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 14. | வலிகாமம் தெற்கு பிரதேச சபை | 19.06.2025 | பி.ப.02.30 | வலிகாமம் தெற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 15. | ஊர்காவற்றுறை பிரதேச சபை | 20.06.2025 | மு.ப.08.30 | ஊர்காவற்றுறை பிரதேச சபை சபா மண்டபம். |
| 16. | வேலணை பிரதேச சபை | 20.06.2025 | மு.ப.11.30 | வேலணை பிரதேச சபை சபா மண்டபம். |
| 17. | வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை | 20.06.2025 | பி.ப.02.30 | வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 18. | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை | 23.06.2025 | மு.ப.09.00 | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை சபா மண்டபம். |
| 19. | சாவகச்சேரி பிரதேச சபை | 23.06.2025 | பி.ப.02.00 | சாவகச்சேரி பிரதேச சபை சபா மண்டபம். |
| 20. | மன்னார் பிரதேச சபை | 24.06.2025 | மு.ப.08.30 | மன்னார் பிரதேச சபை சபா மண்டபம். |
| 21. | மன்னார் நகர சபை | 24.06.2025 | மு.ப.11.30 | மன்னார் நகர சபை சபா மண்டபம். |
| 22. | மாந்தை மேற்கு பிரதேச சபை | 24.06.2025 | பி.ப.02.30 | மாந்தை மேற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 23. | நானாட்டான் பிரதேச சபை | 25.06.2025 | மு.ப.08.30 | நானாட்டான் பிரதேச சபை சபா மண்டபம். |
| 24. | முசலி பிரதேச சபை | 25.06.2025 | மு.ப.11.30 | முசலி பிரதேச சபை சபா மண்டபம். |
| 25. | வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை | 25.06.2025 | பி.ப.02.30 | வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை சபா மண்டபம். |
| 26. | கரைதுறைப்பற்று பிரதேச சபை | 26.06.2025 | மு.ப.08.30 | கரைதுறைப்பற்று பிரதேச சபை சபா மண்டபம். |
| 27. | துணுக்காய் பிரதேச சபை | 26.06.2025 | மு.ப.11.30 | துணுக்காய் பிரதேச சபை சபா மண்டபம். |
| 28. | மாந்தை கிழக்கு பிரதேச சபை | 26.06.2025 | பி.ப.02.30 | மாந்தை கிழக்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 29. | வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை | 27.06.2025 | மு.ப.09.00 | வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை சபா மண்டபம். |
| 30. | வவுனியா வடக்கு பிரதேச சபை | 27.06.2025 | பி.ப.02.00 | வவுனியா வடக்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 31. | நெடுந்தீவு பிரதேச சபை | 30.06.2025 | மு.ப.11.30 | நெடுந்தீவு பிரதேச சபை சபா மண்டபம். |

## செம்மணிப்...

செம்மணி - சிந்துபாத்தி மயானத்தில், அபிவிருத்திப் பணிகளுக்காக நல்லூர் பிரதேசசபையால் கடந்த பெப்ரவரி மாதம் குழிகள் வெட்டப்பட்டபோது, மனிதச் சிதிலங்கள் பல மீட்கப்பட்டிருந்தன. அந்த மனிதச் மனிதச் சிதிலங்கள் 1995, 1996ஆம் ஆண்டுகளில் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது. பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி நீதவான் மேற்கொண்ட ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து, மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியை ஸ்கான் ஆய்வுக்கு உட்படுத்தவும், தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

மே மாதம் 15ஆம் திகதியளவில் இந்துப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், இரு நாள்கள் அகழ்வின் பின்னர் மழை காரணமாகப் பணிகள் கைவிடப்பட்டன. நேற்றையதினம் மீண்டும் அகழ்வுகள் இடம்பெற்றன. ஆனால், ஏற்கனவே அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற பகுதியில் தண்ணீரும் சேறும் இருந்ததால், குறித்த புதைகுழியின் வெவ்வேறு பகுதிகளில் நேற்று எழுமாற்றாக அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போதே, நான்கு பகுதிகளில் மண்டையோடுகளும், இன்னும் சில மனிதச் சிதிலங்களும் அவதானிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நீதவான் ஆ.ஆனந்தராஜா அகழ்வுப் பணிகளைக் கண்காணித்துவருகின்றார். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர் ஆகியோரும் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## யாழில்...

வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளர் படுகாயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஒரு மோட்டார்சைக்கிளில் வருகைதந்த மூவர் அடங்கிய குழுவே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது என்றும், முன்விரோதம் காரணமாகத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-125)

## மீண்டும்...

மே 17ஆம் திகதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அந்தக் குழந்தைக்கு, நிமோனியாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. பின்னர் அந்தக் குழந்தை தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்ட நிலையில், கொரோனாத் தொற்று ஏற்பட்டமையும் உறுதிப்படுத்தப்பட்டது. தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்துவந்த அந்தக் குழந்தை சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளது. (அ-ம-இ)

## பலாலி...

விமான சேவை நிறுவனத்தால் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பலாலி இரத்மலானை இடையிலான விமான சேவைகள் கடந்த 2023ஆம் ஆண்டுடன் இடைநிறுத்தப்பட்டிருந்தன. எனினும், டேவிட் பீரிஸ் விமான சேவை நிறுவனம் அந்தச் சேவைகளை மீண்டும் முன்னெடுக்க முன்வந்த நிலையில், இது தொடர்பான விண்ணப்பத்தை இலங்கை விமான சேவைகள் நிறுவனத்துக்குச் சமர்ப்பித்திருந்தது. அதற்கான தகுதிகாண் நடவடிக்கைகளே நேற்று இடம்பெற்றன.

11 பயணிகள் பயணிக்கக் கூடியவாறான சிறிய ரக விமானங்களே இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. ஒரு பயணிக்கு அதிகபட்சமாக 7 கிலோகிராம் பொதி அனுமதிக்கப்படும். இருவழிப் பயணக் கட்டணம் 68 ஆயிரம் ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வாரத்தில் மூன்று நாள்கள் இந்தச் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-125-26)

## சைக்கிள்...

மொன்று நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது. யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் மற்றும் ஆலோசனைகளைத் தொடர்ந்தே இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் செயலாளர் நாகலிங்கம் இரட்ணலிங்கமும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் தமிழ் தேசிய பேரவையின் சார்பில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன், ந.சிறீகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம், ஈ.சரவணபவன், க.அருந்தவபாலன், வடமாகாண சபையின் முன்னாள் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர் க.நாவலன் ஆகியோர் கலந்துகொண்டனர். அதுபோல், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், முருகேசு சந்திரகுமார் மற்றும் கோவிந்தன் கருணாகரம், நாகலிங்கம் இரட்ணலிங்கம், பா.கஜதீபன், க.சர்வேஸ்வரா ஆகியோர் கலந்துகொண்டனர். உள்ளூராட்சிசபைகளின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் வடக்கில் பெரும்பாலான சபைகளில் ஆட்சி அமைப்பதில் தமிழ்க் கட்சிகளிடையே இழுபறி நிலையே காணப்படுகின்றது. இவ்வாறான பின்னணியில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-125-20)

## பிரதமர்...

பெரமுன வலியுறுத்தியுள்ளது. கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்ததாவது:-

பிரதமர் பதவி மற்றும் அமைச்சரவையில் மாற்றம் வரவுள்ளது என்று சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியாகி வருகின்றன. இப்படியான தகவல்கள் இலங்கைபோன்ற நாடுகளுக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். ஏனெனில் அரசியல் உறுதிப்பாடற்ற நாடுக்கு முதலீட்டாளர்கள் வரமாட்டார்கள். உள்நாட்டு முதலீட்டாளர்களும் புதிய முதலீடுகளை செய்ய முன்வரமாட்டார்கள்.

எனவே, பிரதமர் பதவியில் மாற்றம் வருமா? அல்லது வராதா? என்பதையும், அமைச்சரவை மறுசீரமைக்கப்படுமா? அல்லது இல்லையா? என்பதையும் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும். இந்த விடயத்தில் தாமதம் செய்யக்கூடாது - என்றார். (அ-ம-44)

## விளக்கமறியலில்...

தசாப்தங்களாக தஞ்சமடைந்திருந்த 71 வயதுடைய முதியவர் மீண்டும் இலங்கைக்குத் திரும்பியவேளை குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் பலாலியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த விடயம் நாடளாவிய ரீதியில் பல்வேறு விமர்சனங்களை எதிர்கொண்ட நிலையில், நீதிமன்றத்தில் நேற்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு அந்த முதியவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

## மனிதப்...

படுத்தக்கோரி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் விண்ணப்பமொன்றை முன்வைப்பதற்கு சட்டத்தரணிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

செம்மணி சிந்துபாத்தி இந்து மயான பகுதியில் ஏழு மனித மண்டையோடுகள் நேற்றைய அகழ்வின்போது அவதானிக்கப்பட்டுள்ளன. இதையடுத்தே, அந்தப் பகுதியை மனிதப் புதைகுழியாக அறிவிக்குமாறு சட்டத்தரணிகள் கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

இது தொடர்பில் சட்டத்தரணி வீ.எஸ். நிரஞ்சன் தெரிவித்ததாவது:-

மூன்று மனித மண்டையோடுகளுக்கு மேல் ஒரு பகுதியில் அடையாளம் காணப்பட்டால் அதை மனிதப் புதைகுழி எனப் பிரகடனப்படுத்தமுடியும். எனவே, அரியாலை செம்மணிப்பகுதியில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படும் பகுதியை மனிதப் புதைகுழியாக அறிவிக்கக்கூடிய அனைத்து சூழ்நிலைகளும் காணப்படுகின்றன. எனவே, இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம் - என்றார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாட்கள் தேவை**

மேசன் வேலைக்கு ஆள் தேவை

- கூலி-2800/=
- மேசன்-4000/=

தொடர்புகளுக்கு:
**075 203 9589**

**வேலைக்கு ஆள் தேவை**

யாழ்பாணம் நகரை அண்மித்த பகுதியில்.வீட்டில் தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய நடுத்தர வயதுடைய பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **077 218 1185**

**யாழ்ப்பாணத்திலுள்ள நட்சத்திர விடுதிக்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை**

- F&B Waiter
- House Keeper
- Public Area Cleaner
- Electrician
- Delivery Boy
- store Keeper
- It Technician

தொடர்பு: 076 624 8529, 077 780 0075

ஊடக அடக்குமுறைகளில்

# வடகொரியா போன்று மாறுகிறதா இலங்கை?

## சாகர காரியவசம் கேள்வி

கொழும்பு, ஜூன் 3

இலங்கையை வடகொரியாவாக மாற்றுவதற்குப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் இத்தகைய ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராகப் போராட்டம் வெடிக்கும் என்று பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சாகர காரியவசம் மேலும் தெரிவித்ததாவது:

தனது இயலாமையை மூடிமறைப்பதற்காக ஊடகங்களை ஒடுக்குவதற்கு அரசாங்கம் முற்படுகின்றது. இதற்காக ஆணைக்குழுவொன்று அமைக்கப்படவுள்ளது.

நாட்டில் போரை முடிவுக்கு கொண்டுவந்த மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்கு எதிராகவும் ஊடகங்கள் செயற்பட்டன. ஆனால் மஹிந்த ஊடகங்கள் மீது கைவைக்கவில்லை. ஆட்சி அதிகாரத்தை தக்கவைக்க அவர் ஊடகங்களை ஒடுக்க முற்படவில்லை. கோத்தாபய ராஜபக்ச ஆட்சிகாலத்தில் ஊடகங்கள் எவ்வாறு செயற்பட்டன? ஆனபோதிலும்கூட ஊடகங்களை சுதந்திரமாகச் செயற்பட இடமளித்தோம்.

இலங்கை மற்றும் இந்தியாவில்தான் ஜனநாயகம் சிறப்பாக உள்ளது. இந்நிலையில் இலங்கையை வடகொரியாவாக்குவதற்கு அரசாங்கம் முற்படுகின்றது. அவ்வாறான முயற்சி எடுத்தால் அதற்கு எதிராக வீதியில் இறங்கி போராடத் தயங்கமாட்டோம் - என்றார். (ம-44)

**31ஆம் நாள் நினைவலைகள்**

மண்மகிழ
05.03.1945



மண்ணும் நெகிழ
04.05.2025

**அமரர் சின்னத்துரை சண்முகலிங்கம்**

*(ஓய்வு நிலை உப அதிபர் - யா/சங்குவேலி அ.த.க.பாடசாலை, உரிமையாளர் - சண்யோ கோப்பி & கூல்பார்- சுன்னாகம்)*

வையகம் போற்ற வாழ்ந்த எம்
வானுறையும் தெய்வமே
பழுதில்லாப் புதுமலராய் மலர்ந்து எம்
இதயங்களில் மணம் வீசும் தந்தையே
உயர் குணமேவிய திருவுருவே - எம்
குறைநிறைகள் எடுத்தியம்பிய வழிகாட்டியே!
நீறாகிப் போனாலும் நீங்களே நம் திசைகாட்டி
இதயம் மறுப்பதில்லை....
மறப்பதும் இல்லை...
நீங்கள் இனி இல்லை என்று...

"இரத்தின வாசம்"
வன்னிய சிங்கம் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்.

உங்கள் நினைவலைகளுடன்
குடும்பத்தினர்

(CS/58456) J-1

## மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு புதிய பொறுப்பதிகாரி நியமனம்!



யாழ்ப்பாணம், ஜூன் 3

மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு புதிய பொறுப்பதிகாரி நியமிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் இதுவரை காலமும் கடமையாற்றிய பொறுப்பதிகாரி ஜெயந்த குணதிலக அனுராதபுரம் பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார். இதையடுத்து, அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இ.எஸ்.அபயசேகர மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-125)

அனலைதீவு மனோன்மணி அம்பாள் கோவில் வருடாந்த பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (எ-25,9)



### யாழ்ப்பாணத்தில்...

சட்டத்தின் கீழ் கோரப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே, இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த 2024ஆம் ஆண்டு 4 இடர்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றில் ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 478 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பதிவுசெய்யப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையிலான சொத்தழிவாக 47 லட்சத்து 87 ஆயிரத்து 469 ரூபா காணப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர்களில் 60 ஆயிரத்து 618 பேர் நிவாரணங்களைப் பெற்றுள்ளனர். இதே வேளை பொதுமக்களுக்கான இழப்பீடாக, 5 கோடியே 71 இலட்சத்து 72 ஆயிரத்து 893 ரூபா 58 சதம் வழங்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (அ-ம-125)

### நேற்றுமுதல்...

இவற்றில் கரைதுறைப்பற்று, பூநகரி மற்றும் கரைச்சிப் பிரதேசசபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி நேற்று ஆட்சியமைத்துள்ளது. (அ-ம-125)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.